தளம் கட்டமைப்பு

தளம்
THALAM

தளத்தின்

# விருட்சம்

கிளை – 2024

தளை –01






தளத்தின்

# விருட்சம்

கிளை – 2024
தளை –01

## உள்ளடக்கம்


- தளம் - அறிமுகம் ஆசிரியர் உரை
- தை மாதம் நடைபெற்ற நிகழ்வுகள்
- மாசி மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்
- மாணவர் பக்கம் - ஆக்கங்கள்
- இளைஞர்கள் கண்ணோட்டத்தில் அரசியல்
- இதழாசிரியர் குழாம் விபரம்

## தளம் - அறிமுகம்

“சுற்றத்தால் சுற்றப்பட்டவொழுகல் செல்வந்தான்
பெற்றதால் பெற்ற பயன்” என திருக்கோணமலை இளைஞர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்து அவர்களுடைய வாழ்வை முன்னேற்ற எந்தவித அச்சமுமின்றி எழுந்து ஐந்து வருட காலமாக தமது சேவையை மேற்கொண்டு தடம் பதித்த அமைப்பே எங்கள் ”தளம்” அமைப்பாகும்.

அதே போல் 2024 ஆம் ஆண்டும் தமது ஆறாம் ஆண்டிற்கான அடித்தளத்தை உருவாக்கியது. அதனடிப்படையில் எங்கள் ”தளம்” அமைப்பினூடாக க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம், பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக வாய்ப்பை தவறிய மாணவர்கள் அனைவருக்குமே கல்விச் சேவை, திறன் விருத்தி, வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல், வாழ்வியல் திறன் விருத்தி போன்ற சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் செயலமர்வுகள், நிகழ்நிலை கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் போன்றனவும் சிறந்த அனுபவம் மிக்க வளவாளர்களை கொண்டு நடாத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை திட்டம், வெளிக்கள செயற்பாடுகள் போன்றவற்றையும் நடைமுறை செய்து வருகின்றது.

திருக்கோணமலை இளைஞர்களோடு மட்டுமன்றி திருக்கோணமலை மக்கள் அனைவருடனும் தமது நட்புறவை கொண்ட ஒரு சிறந்த அமைப்பாகும். “தளம்” அமைப்பின் சேவைகளை மற்றைய மாவட்டங்களும் பாராட்டுகின்றன. இவ்வாறான தன்னுடைய சேவைகளை இன்னும் பலரும் அறிந்து அவர்களும் பயன் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்திலும், திருக்கோணமலையில் இடைவெளியாக உள்ள, “திருக்கோணமலைக்கான வெளியீடு” என்ற விடயத்தை பூர்த்தி செய்யவும், எமது முதலாம் மாத இதழை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம்.

## ஆசிரியர் உரை

இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு “தளம்” அமையமானது பல்நோக்கு சிந்தனையுடன் செயல்பட்டு வருகிறது. அதில் ஒரு மைற்கல்லாக “விருட்சம்” எனும் மாத இதழினை வெளியிடுவதில் இவ்விதழின் ஆசிரியர் என்ற வகையில் மிகவும் உவகை அடைகிறேன்.

திருமலை மண்ணின் இளையோர்களினது குரலை உலகறிய செய்யும் நோக்குடனும், தற்சமயம் நிலவும் எம்மண்ணின் எழுத்து பணிகளுக்கான வெற்றிடத்தை நிரப்பும் நோக்குடனும், முற்றுமுழுதாக திருக்கோணமலை இளைஞர்கள் குழுமத்தினால் இவ் விருட்சத்திற்கான விதை தூவப்பட்டுள்ளது.

“பயன்தூக்கார் செய்த உதவி –நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது” எனும் வள்ளுவன் வாக்கிற்கமைய எந்த ஒரு பிரதிபலனையும் கருதாது இவ்விதழானது உரிய காலத்தில் வெளியிட உதவிய ஆலோசனை, வடிவமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு எமது அளப்பரிய நன்றிகளை நவில்வதோடு, பல கைகள் ஒருங்கே சேரப்பட்டு உங்களது கைகளில் வந்தடைந்துள்ள “விருட்சம்” எனும் இம்மின்னிதழானது கூடிய விரைவில் ஒரு இதழாக திருக்கோணமலை மண்ணில் வேரூன்றி, கிளை விட்டு, துளிர்க்க உங்களது ஆதரவினை, உங்கள் படைப்புகளாக எதிர்பார்த்து இருக்கின்றோம்.

இவ்விதழை பற்றிய கருத்துக்களை மற்றும் உங்களது
ஆக்கங்களை அனுப்பி வைக்க வைக்கவேண்டிய
தொலைபேசி இலக்கம் - 94 77 624 3212



# தை மாதத்தின் நினைவுகள்

## மகாபொல விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்வது எப்படி? மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்று கொள்ளக்கூடிய நிதி உதவிகள்



பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்தல் தொடர்பான விளக்கமும், அவர்கள் வேறு வழிகளில் பெறக்கூடிய நிதியுதவிகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் புதன்கிழமை (03.01.2024) காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை "தளம்" அலுவலகத்தில் இடம்பெற்றது.

இவ் அமர்வில் மாணவர்கள் தாம் தெரிவாகிய பல்கலைக்கழகம், கற்கைநெறி ஆகியவை பற்றி பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதி, மடிக்கணினி அடங்கலான கற்றல் உபகரணங்கள், மருத்துவ செலவுகள், ஆடை அணிகலன் மற்றும் அன்றாட பாவனைப் பொருட்கள், பொழுதுபோக்குகள் முதலான தேவைப்பாடுகள் குறித்தும், மாணவர்களால் மகாபொல விண்ணப்பத்தின் உள்ளீடுகள் ஆலோசிக்கப்பட்ட பின் அதன் அறிவுறுத்தல்களான முழுப்பெயர், குடும்ப வருமானம், சகோதர, சகோதரி, தாய், தந்தை, பாதுகாவலர் விபரம், கையொப்பம் ஆகியவற்றுக்கான விளக்கங்கள், அவற்றுக்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள், பெயரில் வழு ஏற்படுகையில் அதன் உண்மைத்தன்மையை கூறும் ஆவணங்கள், அவற்றை பெறுதல் உட்பட விண்ணப்ப பூரணப்படுத்தல்கள் பற்றியும் விளங்கப்படுத்தப்பட்டது.

செல்வி அ. தர்ஷிகா

## தனிநபர் சந்தைப்படுத்தல் தொடர்பான கருத்தமர்வு

தொழிற்துறை சார்ந்தும், தனிப்பட்ட ரீதியிலும் ஒருவர் தனது வாழ்க்கையில் முன்னேற்றம் காண தனி நபர் சந்தைப்படுத்தல் அவசியமானதாகும். இதனை கருத்திற்கொண்டு திருக்கோணமலை வாழ் இளைஞர்களின் திறன்விருத்தி செயற்பாடுகளில் ஆர்வம் கொள்ளும் "தளம்" அமைப்பினால், 04.01.2024 அன்று காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை "தனிநபர் சந்தைப்படுத்தல்" தொடர்பான கருத்தமர்வு நடைபெற்றது.

இக் கருத்தமர்வின் வளவாளராக தளத்தின் இயக்குனர் திரு. சு. சகிலன் அவர்கள் கலந்து கொண்டு, தனிநபர் சந்தைப்படுத்தல், நவீன கால சந்தைப்படுத்தல் நடைமுறைகள் மற்றும் இலகு சந்தைப்படுத்தல் வழிமுறைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.



இதில் நுகர்வோர் இலக்கு என்றாலும், நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்புடைய விற்பனையாளர் மிக முக்கியமாகக் கருதப்படுகிறார். மேலும் நேரடியாக விளம்பரப்படுத்தல், மின்னஞ்சல் சந்தைப்படுத்தல், அனுசரணைகள் போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளரிடம் பொருட்கள் அல்லது சேவைகளை கொண்டு சேர்க்கலாம். அத்தோடு வாடிக்கையாளர் தேவையை கண்டறிதல், திருப்திப்படுத்துதல், வளங்களைப் பயன்படுத்துதல், நிறுவனத்திற்கு நிறுவனம் வெவ்வேறு தயாரிப்பு, சரியான வாடிக்கையாளரைக் குறிவைத்தல் போன்றவை சந்தைப்படுத்தலில் அவசியமாகும்.

இவ்வாறான பல விடயங்களைக் கூறி பங்குபற்றிய மாணவர்களைக் கொண்டு குழு செயற்பாடுகளையும் மேற்கொண்டு இந்தக் கருத்தமர்வை சுவாரசியமாகவும், பயனுள்ள விதமாகவும் நடத்தினார். இதன் மூலமாக மாணவர்கள் சந்தைப்படுத்தல் பற்றிய அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.

செல்வி . ரதனியா

# தை மாதத்தின் நினைவுகள்



## தை பிறப்பில், தமிழர் கலாசாரம்!

நமது திருக்கோணமலையினுடைய தமிழ் இளையோர் மீது தாக்கம் செலுத்தும், கலாசாரம், பண்பாடு சார்ந்து “தளம்” அமைப்பானது செயற்படுகிறது. அதனடிப்படையில் திருக்கோணமலையின் மாபெரும் பொங்கல் விழாவினை 08.01.2024 அன்று 1500 நடனக் கலைஞர்களோடு, 1008 பொங்கல் பானைகள் வைத்து சிறப்பாக நடாத்த தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பொங்கல் நிகழ்விற்கு முன்பதாக கபடி, ஜல்லிக்கட்டு மற்றும் சிலம்பம் போன்ற தமிழரின் பாரம்பரிய போட்டிகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் தமது பங்களிப்பை வழங்கி அதன் மூலமாக இளையோரின் பங்கேற்பையும், திருக்கோணமலையில் இடம்பெறும் தமிழர் நிகழ்வு, தமிழரின் கைகளில் நடக்க தளம் அமைப்பு திட்டமிட்டதற்கு ஏற்ப திருமலை வாழ் இளையோருடன், “தளம்” அமைப்பும் கரம் கோர்த்து நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

இதற்கான முன்னாயத்த, ஒழுங்கு வேலைகளை மேற்கொள்வதற்காக “தளம்” அமைப்பினால் இளைஞர்களோடு கலந்துரையாடல்கள் 07.01.2024 மற்றும் 14.01.2024 ஆகிய இரு நாட்களிலும் இடம்பெற்றது. நிகழ்வினை ஒழுங்கமைக்கும் விதமாக முதலில் இளையோருடன் நிகழ்நிலை கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. அதில் பொங்கல் விழா பற்றிய விளக்கம், குழுவினர் பொங்கல் விழாவிற்கு முன்னைய தினம் செய்ய வேண்டியவை, அன்றைய தினம் செய்ய வேண்டியவை, அலங்கார வேலை ஒழுங்கு போன்றவற்றை கலந்துரையாடினர். இதன்படி இளைஞர்கள் “மரபு” எனும் குழுவாக இணைந்தனர்.

மேலும் 15.01.2024 அன்று “தளம்” அலுவலகத்தில் பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது. இதில் தளத்தின் நிர்வாக குழுவினர், கீற்றுகள், துகிர் அங்கத்தவர்கள், மரபுக் குழுவினர் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து நிகழ்வினை இனிதே சிறப்பித்தனர். இன்றைய காலகட்டத்தில் திருக்கோணமலைத் தமிழ் இளையோர் மீது தாக்கம் செலுத்தும் தமிழ்மொழிசார் விடயங்களில் “தளம்” அமைப்பு என்றும் முன்னிற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி மு. அபிநயா

## செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிமுகம்

“தளத்தின்” வாராந்த நேரடி கருத்தமர்வுகள் போல 11.01.2024 அன்று சுவாரசியமானதும், தற்காலத்திற்கு ஏற்றவாறானதுமான செயற்கை நுண்ணறிவு பற்றிய கருத்தமர்வு இடம் பெற்றது. நமது நண்பனா? அல்லது எதிரியா? என தெரியாத செயற்கை நுண்ணறிவு நமக்குத் தேவையான தகவலை எளிதாகப் பெற்றுக் கொள்ள உதவும் கருவியாக உருவாகத் தொடங்கியுள்ளது. இது இணையத்தளம் மூலம் நம்முடைய தரவுகளை அறிந்து கொள்வதோடு, நாணயத்தின் இரு பக்கங்கள் போல சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.



செட் ஜிபிடி என்பது நமது கேள்விகளுக்குப் பதில் கூறினாலும், அந்த பதிலானது நூறு வீதம் சரியானதாக அமையும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமில்லை. இணையத்தளமானது நம்மிடமிருந்து கற்றுக்கொள்கிறது எனும் கருத்து தொடர்பில் பேசப்பட்டது. செட் ஜிபிடி ஆனது இணையத்திலிருந்து தகவலை பெற்று நமக்கு அளிக்கும். சிலவேளைகளில் குழப்பமான பதில்களையும் தரக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறான பல பயனுள்ள விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

செல்வி ம. துவாரகா

# தை மாதத்தின் நினைவுகள்



## செயற்றிட்ட திட்டமிடல் ஓர் அறிமுகம்

“தளம்” அமைப்பினால் இளைஞர்களுக்கு அவசியம் என கருதப்பட்டு ஒழுங்குசெய்யப்படும் கருத்தமர்வுகளில் ஒன்றாக செயற்றிட்ட திட்டமிடல் தொடர்பான அமர்வானது 18.01.2024 அன்று காலை 09.30 - 12.45 வரை தளம் அலுவகத்தில் இடம்பெற்றது.

செயற்பாடுகள் ஒன்று சேர்ந்தே செயற்றிட்டங்கள் உருவாகின்றன என்ற அடிப்படையில், சரியான இலக்கை நோக்கி செல்லவும், நேரத்தை விரயமாக்காது சரியான முறையில் பூர்த்தி செய்யவும் செயற்றிட்ட திட்டமிடல் மேற்கொள்ளப்படுவது தேவையாகிறது. ஒரு செயற்றிட்டமானது முறையற்ற நோக்கங்கள், தவறான திட்டமிடல் முறை, முறையான திட்ட மேலாண்மை முறையின்மை, புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவின்மை, தகுதியான போதிய பணியாளர்கள் இன்மை போன்ற காரணங்களால் தோல்வியடைகின்றது. இளைஞர்கள் இரு குழுக்களாக பிரிந்து திருக்கோணமலையின் பொருளாதாரத்தை அதிகரித்தல், திருக்கோணமலை தமிழரின் பாரம்பரியத்தை பேணுதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றி மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டம் பற்றி சிறு முன்வைப்பு நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து காலணித்துவ சிந்தனை தொடர்பில் சிறு கலந்துரையாடல் வளவாளராக கலந்து கொண்ட சு. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களால் வழங்கப்பட்டதுடன், செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் மனித சிந்தனையை வளர விடாமல் தடுக்கும் ஒரு கருவியாக செயற்படும் மேலும் காலணித்துவ சிந்தனை வளர்ச்சிக்கான கருவியாக இன்றைய காலகட்டத்தில் இது செயற்படுகின்றது என பல புதிய விடயங்களை இளையோர் அறிந்து கொண்டதுடன், இந்த அமர்வின் முடிவில் “தளம்” அமைப்பின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

செல்வி ஞா. நிதுர்ஷிகா

## “கல்வி மட்டும் போதுமா?” நிகழ்நிலை வாராந்த கருத்தமர்வு – 16

“தளம்” அமைப்பினால் இளைய சமூகத்தினரின் திறன் விருத்தி தொடர்பில் ஆற்றப்பட்டு வரும் செயற்பாடுகளில் வாராந்தம் இடம்பெறும் நிகழ்நிலை அமர்வுகளும் குறிப்பிடத்தக்கனவாகும். அதனடிப்படையில் தை மாதத்திற்கான முதல் நிகழ்நிலை அமர்வான “கல்வி மட்டும் போதுமா?” எனும் தலைப்பின் கீழ் வைத்தியர் சிவச்சந்திரன் அவர்களால் கலந்துரையாடப்பட்டது.

இவ் அமர்வில் இலங்கையில் வாழும் இளையோருக்கு பாடசாலைக்கல்வி மட்டும் போதாது. கல்விக்கு அப்பாற்பட்ட விடயங்களிலும் எமது சிந்தை இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும், அவ்வாறு ஏனைய விடயங்களில் ஆர்வம் காட்டுவதன் மூலம் அடையக்கூடிய சாதகமான காரணிகள் தொடர்பிலும் தெளிவான, அவசியமான விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



கல்வியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வாழ்வை நடத்திச் செல்லலாம் என கற்பனை செய்து கொண்டிருக்கும் இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு, கற்பனை செய்ய முடியாத அளவுக்கு உலகம் பெரியதாகும் எனவும், கல்வியை மட்டும் அவசியம் என கருதுவதால் சில விடயங்களை எம்மால் எதிர்கொள்ள இயலாமல் போகும் எனவும் தனது கருத்தினை பகிர்ந்து கொண்டார். கல்வியறிவு என்பது அடிப்படை அறிவு மாத்திரமே, தற்கால வாழ்விற்கு கல்வி அறிவோடு, கணினி அறிவும் அவசியமானது. ”சமூகவலைத்தளங்கள் நம்மை வளர்ச்சியடையச் செய்வதற்கு மட்டுமே தவிர நம்மை வீழ்ச்சி பாதைக்கு இட்டுச் செல்ல அல்ல” என்ற கருத்துக்கள் பற்றி தெளிவாகவும் முழுமையாகவும் எடுத்தியம்பினார்.

செல்வன் அ. சுபாஷணன்

# தை மாதத்தின் நினைவுகள்

## VAT வரி அதிகரிப்பு இளம் தலைமுறையினர் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும்?? நிகழ்நிலை வாராந்த கருத்தமர்வு – 17

“தளம்” அமைப்பினூடாக வாராந்தம் நடைபெறுகின்ற நிகழ்நிலை கருத்தமர்வு என்ற வகையில் இன்றைய காலத்தில் எம் வாழ்வில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் நமது நாட்டின் வரி அதிகரிப்பு பற்றிய புரிதலை இளம் சமுதாயத்தினரின் மத்தியில் கொண்டுவரும் நோக்கில் 12.01.2024 அன்று எமது நாட்டின் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு இளம் தலைமுறையினர் மீது தாக்கம் செலுத்தும்? என்பது பற்றி சு. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களால் கருத்தமர்வு நிகழ்த்தப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியே வரி அதிகரிப்புக்கு பிரதான காரணம் ஆகும். அதாவது உற்பத்திக்கான செலவு அதிகரிக்கையில் உற்பத்திகளின் அளவு குறைவடையும். இலங்கை மக்களின் தற்போதைய நிலையில் தொழிலின்மை 14 வீதம் ஆகும். அதுமட்டுமின்றி, 7 இலட்சம் குடும்பங்கள் கடன் வாங்கி உண்ணுவதாகவும், வறுமை 25 வீதம் காணப்படுவதாகவும் புள்ளிவிபரங்கள் கூறுவது வருந்தக்கூடிய விடயமாகும். இவ்வாறான பிரச்சினைகளே சிலரை தவறான முறையில் வருமானம் ஈட்ட வழிவகுக்கிறது. இந்த பெறுமதி சேர் வரி மூலம் பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. இதில் கட்டணங்கள் 18 வீதம் அதிகரித்து மாணவர்களின் கல்வியையும் பாதிப்பதோடு, பணத்தை ஆயுதமாக மாற்றும் செயற்பாடும் இடம்பெறுகிறது.

இலங்கையில் வருமான வரி மட்டுமே நேரடி வரியாக இருப்பதோடு, ஏனையவை நேரில் வரிக்குள் அடங்கி இலகுவாக வருமானத்தை பெற்றுக் கொடுக்கிறது. மேலும், இது மருத்துவத்துறையிலும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்த காத்திருக்கிறது. நுகர்வு கலாசாரத்தை மாற்றுவதே இதற்குத் தீர்வாக அமைகிறது.

செல்வி மு. அபிநயா

## "Learn about UNIVOTEC" நிகழ்நிலை வாராந்த கருத்தமர்வு – 18

தன்னார்வ தொண்டர் நிறுவனமாக இளையோரின் திறன்விருத்தி தொடர்பில் அக்கறை காட்டி வரும் “தளம்” அமைப்பினால் வாராந்தம் நிகழ்நிலை மூலமான கருத்தமர்வுகள் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டதற்கு இணங்க, கடந்த 14.01.2024 அன்று மாலை **"Learn about UNIVOTEC"** எனும் கருத்தமர்வு திரு. ஜெ. தோவிஷாந்த் அவர்களை வளவாளராக கொண்டு இடம்பெற்றது.

கொழும்பு மாவட்டத்திலுள்ள இரத்மலானை எனும் இடத்தில் அமையப்பெற்றுள்ள இப் பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். தகவல் தொழிநுட்ப பீடம், கல்விப்பீடம், பொறியியல்பீடம், தொழில்துறை தொழிநுட்பபீடம் போன்ற 4 பீடங்களையும், அதன் கீழ் 14 கற்கைநெறிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

THE UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY (UNIVOTEC)

அரச பல்கலைக்கழகம் ஒன்றில் விண்ணப்பிக்கும் செயற்பாடு போலவே இப் பல்கலைக்கழகத்திற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. முதல் படிவத்திற்குள் உள்ளடங்காத பல்கலைக்கழகங்களின் வரிசையில் இதுவும் ஒன்றாகும். முழுநேர, பகுதிநேர கற்கை நெறிகளை உள்ளடக்கிய இப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளுக்கான கால அளவு 4 வருடங்களாகும்.

செல்வி ம. டிலானி

# தை மாதத்தின் நினைவுகள்



## “துகிர்” செயற்பாடுகள்

“இளையோரின் திறன்விருத்தி தொடர்பில் ஆர்வம் காட்டி வரும் “தளம்” அமைப்பானது பல்கலைக்கழகம் தெரிவான, பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த மாணவர்களுக்கான திறனை விருத்தி செய்யும் நோக்கில் “துகிர்” எனும் பெயரில் செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்து மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

இம்மாணவர் குழுவிற்கு வழங்கப்பட்ட பயிற்சிகளாக, தளத்தோடு இணைந்த கிளையாக செயற்பட்டு வரும் “Trinco Foodie Park” எனும் உணவகத்தின் கணக்குகளை பதிதல் அதாவது விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் விபரங்களை பதிதல், தளத்தின் தரவுகளை சரிபார்த்தல் மூலம் பதியப்பட்ட தரவுகள் சரிபார்க்கப்படுவதுடன் தேவையற்ற கோப்புக்களை நீக்குதல், பெயர் மாற்றம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் மகாபொல, சுய சந்தைப்படுதல் போன்ற செயற்பாடுகளின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்தல், க. பொ. த. சாதாரணதர மாணவர்களின் மீள்திருத்த விண்ணப்ப விபரங்கள், இரண்டாம் தடவை க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் கூட்டுத்தொகை சரிபார்த்தல் மேலும் 2022 இல் வரோதயநகர், கன்னியா போன்ற பிரதேசங்களில் மரக்கன்றுகள், விதைகள் கொடுக்கப்பட்ட விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் வழங்கப்பட்டவர்களின் விபரமும், வழங்கப்படாதோரின் விபரங்களும் பதிவு செய்யப்பட்டது.

செல்வன் ஹரிஷ்

## “தளிர்” செயற்றிட்டம்

திருக்கோணமலையில் இளையோரின் திறன் விருத்தியில் ஐந்து வருட அனுபவத்துடன் செயற்பட்டு வரும் எங்கள் “தளம்” அமைப்பு ஊடாக, 2023ம் ஆண்டு உயர்தரம் தோற்றிய மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பயிற்சிகள் ஆரம்பிப்பதை முன்னிட்டு 23.01.2024, 25.01.2024, 29.01.2024, 31.01.2024 ஆகிய தினங்களில் மாணவர்களுக்கான நேர்முக தேர்வுகள் இடம்பெற்றது.

“தளிர்” எனப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு மாத கால பயிற்சிகளுடன் நடைபெற ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதில், அடிப்படை கணினி அறிவு, ஆங்கிலம், சிங்களம், புகைப்பட கற்கை, செயற்கை நுண்ணறிவு தொடர்பான பயிற்சிப் பட்டறைகளும் இலத்திரனியல் சந்தைப்படுதல், சுயபாதுகாப்பு போன்ற திறன் விருத்தி செயற்பாடுகள் உட்பட மேலதிகமாக, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியில் மாணவர்கள் மூன்று பெறுமதியான சான்றிதழ்கள், பகுதி நேர வேலைவாய்ப்பு, அனுபவக் கடிதம், கொடுப்பனவுகள் (நிபந்தனை பொருந்தும்) போன்றவற்றை பெறக்கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.







செல்வி ஞா. நிதர்சனா

# தை மாதத்தின் நினைவுகள்



## உளவியல் வகுப்புக்கள்

மனித நடத்தை பற்றி ஆராயும் இயலே உளவியல் ஆகும். இன்றைய காலகட்டத்தில் மனிதர்களின் நடத்தை தொடர்பாக அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியத்தின் அடிப்படையிலும், இளைஞர்களின் ஆர்வத்தின் அடிப்படையிலும் “தளம்” அமைப்பினால் உளவியல் தொடர்பான கற்கை நெறி வகுப்புகள் “தளம்” அலுவலகத்தில் 16.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டன. இதில் மனிதர்களது உளவியல் செயற்பாடுகள், கண் அசைவு, சிரிப்பு, கோபம் போன்ற உணர்ச்சி பற்றிய விளக்கம், பழக்க வழக்கங்கள் போன்றவை தொடர்பாக தெளிவுபடுத்தபட்டன.

இவ் வகுப்புகள் நிகழ்நிலை மூலமாக யாலே பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் இரண்டு மாதகாலம் நடைபெற்றதோடு, உளவியல் தொடர்பான விளக்க வழிகாட்டுதல்கள் சி. ஹயக்கிரிவன் அவர்களால் நேரடி வகுப்பின் மூலம் வழங்கப்பட்டது. இதன் மூலம் இளைஞர்கள் வெளிநாட்டு பல்கலைகழக சான்றிதழ், “தளம்” அமைப்பின் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

செல்வி மு. அபிநயா

## பொழுது போக்கு சார்ந்த செயற்பாடுகள்.

தளத்தின் மூலம் கல்வி, வேலை வாய்ப்பு மட்டுமின்றி தங்களுடைய திறன்விருத்தி, தொழில்நுட்ப அறிவு, ஆங்கில அறிவு போன்றவற்றினை இலவசமாக வளர்த்துக் கொண்டு “தளம்” அமைப்பின் மாணவர் குழுமங்களாக இயங்கி வரும் துகிர், கீற்றுக்கள் குழுவினரால் பொழுதுபோக்குசார் செயற்பாடுகளில் ஒரு பகுதியாக தளம் அமைப்பின் அலுவலகத்தின் குறித்த பரப்பில் மிளகாய் கன்றுகள் 04.01.2024 அன்று நடப்பட்டது. இதில் களைப்பறித்தல் மற்றும் செடிகளுக்கு நீர்ப் பாய்ச்சல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் இளையோரிடையே பயிர்ச்செய்கை மற்றும் மரநடுகை போன்ற செயற்பாடுகளில் நாட்டத்தை அதிகரிப்பதை தலையாய நோக்கமாகக் கொண்டு இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்றைய நவநாகரீக யுகத்தில் தொழில்நுட்பங்களின் விருத்தியால் கையடக்க தொலைபேசிகளில் முடங்கிக் கிடக்கும் இளையோரினை தொழில்நுட்பத்திற்கு அடிமைப்படவிடாமல் ஏனைய பொழுதுபோக்கு அம்சங்களில் அவர்களை ஈடுபடவைப்பது சமூகத்தினராகிய எமது கடமையாகும்.

செல்வி மு. அபிநயா

## அடிமையாதல் பராமரிப்பு வகுப்புக்கள்



“தளம்” அமைப்பினால் மேலதிக கல்விச்சேவைகளில் ஒன்றாக, அடிமையாதல் பராமரிப்பு வகுப்புக்கள் 17.10.2023 அன்றைய தினம் இளைஞர்களின் திறன் தொடர்பில் ஆர்வம் காட்டப்பட்டதற்கு இணங்க “தளம்” அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்நிலை மூலமாக யாலே பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் இரண்டு மாதகாலம் நடைபெற்ற இந்த வகுப்பானது, கற்கைநெறி தொடர்பில் விளக்கமளித்து வழிகாட்டுவதற்காக சி. ஹயக்கிரிவன் அவர்களால் நேரடி வகுப்புக்கள் “தளம்” அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதில் குறித்த சில செயற்பாட்டிற்கு அடிமையாதல் தொடர்பான விளக்கம், அடிமையாகிய பழக்கங்களில் இருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எனப் பல்வேறுபட்ட கருத்துக்கள் வழங்கப்பட்டன.

வகுப்புகளின் இறுதியில் கற்கை நெறியை பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக்கழக சான்றிதழோடு “தளம்” அமைப்பின் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

செல்வி மு. அபிநயா

# தை மாதத்தின் நினைவுகள்

## தளமும், பானு அழகுக்கலை நிறுவனமும்.

நாகரிக வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் இன்றைய மனிதர்கள் வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகளை மேற்கொள்வதையே விரும்புகின்றனர். அதனடிப்படையில், பெண்களுக்கான வருமானத்தை ஈட்டி கொடுக்கும் சுயதொழில் வாய்ப்புக்களில் அழகுக்கலை சார்ந்த தொழில் வாய்ப்புகளும் முதன்மை வகிக்கின்றன.

இதனை நோக்காக கொண்டு இளைஞர்களின் குறிப்பாக பெண்களின் விருத்தி தொடர்பில் கவனம் செலுத்தி, அது தொடர்பான கற்கை நெறிகளை மேற்கொள்வதற்காக பானு அழகுக்கலை நிறுவனம் முன் வந்ததன் அடிப்படையில், அவர்கள் அவ் வகுப்பினை தொடர்வதற்கான இடவசதி கோரி “தளம்” அமைப்போடு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு இணங்க, 26.12.2023 தொடக்கம் 31.12.2024 வரை இந்த வகுப்புகள் நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலயங்கள் வீதம் வாரம் ஒன்றுக்கு மூன்று நாட்கள் நடத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது.

அதனடிப்படையில், “தளம்” அமைப்பிற்கு எந்தவொரு இடையூறுமின்றி, சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது.

செல்வி மு. அபிநயா

## மொட்டை மாடி Talk Trincographer Society

கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றைய காலகட்டம் வரையான வரலாறு கொண்ட இவ் அமைப்பானது புகைப்படத் துறையில் ஆர்வம் கொண்ட இளையோருக்கான களமாக இயங்கிக் கொண்டு வருகின்ற தன்னார்வ அமைப்பு என்ற பெருமைக்குரியதோடு, தளம் அமைப்போடு இணைந்து சில செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதனடிப்படையில், இளையோருக்கு புகைப்பட துறையில் ஆர்வத்தை தூண்டும் வகையில் செயற்படும் இவ் அமைப்பினால், ஒவ்வொரு மாதமும் மொட்டை மாடி டாக் என்ற பிரிவில் அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, இவ் அமர்விற்கான இடம் ”தளம்” அலுவலகத்தில் ஒதுக்கப்படுகிறது.



2024 ஆம் ஆண்டு முதலாவது அமர்வான, ஜனவரி மாதத்திற்கான அமர்வானது 23.01.2024 அன்று 7.30 - 9.00 வரை ”தளம்” அலுவலகத்தில் இடம்பெற்றது. 8 பேர் கலந்து கொண்ட இவ் அமர்வின் வளவாளராக திரு.பெஞ்சமின் என்பவர் கலந்து கொண்டு, புகைப்படம் எடுத்தலுக்கான விதிகளுள் ஒன்றான கம்போசிஷன் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

இளைய சமூகத்தினரிடையே புகைப்படம் எடுப்பதில் ஆர்வத்தை தூண்டும் வகையில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் அமைகிறது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

செல்வி ம. டிலானி

# தை மாதத்தின் நினைவுகள்

## அம்பாறையில் “தளம்” கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல்

இளையோருக்கு ஆரோக்கியமான எதிர்காலம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் ஆறாம் அத்தியாயத்தில் நுழைந்துள்ள எமது “தளம்” அமைப்பின் உப கட்டமைப்பு ஒன்றை அம்பாறை மாவட்டத்தில் கல்வி, வேலை வாய்ப்பு, திறன் விருத்தி தொடர்பான செயற்பாடுகளை சமூகத்திற்கு வழங்குவதற்காக “திருக்கோவில்” பிரதேசத்தில் கட்டியெழுப்புதல் குறித்த கலந்துரையாடல் 25.01.2024 அலுவலகத்தில் இடம்பெற்றது.



அம்பாறை பிரதேசத்தின் பல்கலைக்கழக மாணவர்களான திரு. சுதர்ஷன், திரு. கிஷோக்குமார், ஊடகவியலாளர் திரு. மிதுர்ஷன் ஆகியோருக்கும் “தளம்” அமைப்பின் நிர்வாகியான சி. ஹயக்கிரிவன் மற்றும் துகிர், கீற்றுக்கள் அங்கத்தவர்கள் சிலருக்கும் இடையே நிகழ்ந்த கலந்துரையாடலில அமைப்பு உருவாக்கம் குறித்தான சாதக, பாதகங்கள் அலசப்பட்டன.

இதன் போது தளத்தின் பிற ஆதிக்கம் இன்றிய தனிப்பட்ட சுதந்திரமான செயற்பாடுகள், உள்நாட்டு, புலம்பெயர்ந்தோர் தமிழர்களின் ஒத்துழைப்புக்கள், நிதிப்புலம் பற்றி விளக்கப்பட்டது. அம்பாறையில் அனுபவம் மிகுந்தோருக்கான வேலைவாய்ப்புக்களின் பெரும்பான்மையின் ஆதிக்கம் காரணமாக இளையோருக்கான முன்னுரிமைகள் குறைக்கப்படுகிறது. கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், திறன்விருத்தி ரீதியான விளக்கமின்மையால் இளையோருக்கான எதிர்கால வாய்ப்புக்கள் தட்டிப்பறிக்கப்படுகின்றன. இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு திறமையான மாணவர்களை ஊக்குவிக்கும், விளக்கமளிக்கும் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், முகாம்கள் நடத்துதல், வேலை வாய்ப்புக்கள் பற்றிய விபரம், தெளிவூட்டல் மேற்கொள்ளல், அமைப்பின் ஆரம்பகட்டத்தில் சமூக வலைத்தளங்களினூடாக சேவைகளை வழங்க மேற்கொண்ட தீர்மானம் மற்றும் தொலைபேசி தொடர்பாடலை இரு அமைப்பிற்கும் தொழிற்படுத்தல், நிகழ்நிலை ரீதியிலுமான ஒத்துழைப்புக்கள் போன்ற செயற்பாடுகள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

செல்வி ஞா. நிதர்சனா

## தளத்தின் மாதாந்த பொதுக்கூட்டம்

2024 ஆம் ஆண்டின் “தளத்தின்” முதலாவது மாதாந்த பொதுக்கூட்டம் 28.01.2024 இல் தளம் அலுவலகத்தில் இடம்பெற்றதுடன், கூட்டத்தில் “தளத்தின்” மாத இதழ் வெளியீடு, “தளிர்” செயற்றிட்டம் மற்றும் தளத்தின் இதர செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.



கீற்றுக்கள், துகிர், மரபு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடப்பட்டதில், திருக்கோணமலையில் பத்திரிகை வெளியிடுவதற்கு என்ன தேவைப்பாடு உள்ளது? என்பது பற்றிய கேள்விகள் எழுந்தன. சிறிய காலத்திற்கு முன் நூலகம் ஒன்றினால் “நூலகம்” எனும் தலைப்பில் பத்திரிகைகள் வெளியிடப்பட்டு தற்போது அதுவும் நிறுத்தப்பட்டதுடன் திருக்கோணமலையில் தற்போதைய காலகட்டத்தில் எவ்விதமான பத்திரிகைகளும் வெளியிடப்படுவதில்லை. இத்தாக்கம் குறித்து தளத்தின் மாத இதழ் ஒப்பிடப்பட்டதுடன் இதழிற்கான தலைப்பாக “விருட்சம்” தெரிவு செய்யப்பட்டதுடன் குறுக்கெழுத்து, புதிர், நுண்ணறிவு, கேலிச்சித்திரங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரித்தல் பற்றிய கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து “தளிர்” செயற்றிட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும், இன்றைய யுகத்தில் இளையோர் சவால்களை கையாண்டு வெற்றிகரமாக எதிர்நோக்குவதற்கான தயார்படுத்தும் செயற்பாடுகள், செயற்றிட்டங்களின் கால அளவு, வகுப்புக்களின் தன்மை விளக்கப்பட்டதோடு தளத்தின் ஏனைய செயற்றிட்டங்கள் பற்றி அலசப்பட்டதுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

செல்வி ஞா. நிதர்சனா














# தளத்தின் மாசி மாதத்திற்கான திட்டமிடல்

“தளம்” அமைப்பினால் 2024ம் ஆண்டின் தை மாதத்திற்கான செயற்றிட்டங்கள் திட்டமிட்டபடி முடிவடைந்த நிலையில் மாசி மாதத்திற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

1) “தளிர்” “தளம்” அமைப்பு ஊடாக, மாணவர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிகள்!

இளையோரின் திறன் விருத்தி தொடர்பாக சிரத்தை காட்டி வரும் “தளம்” அமைப்பினால் 2023ம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி முடித்த மாணவர்களுக்காக “தளிர்” எனும் செயற்றிட்டம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான நேர்முக தெரிவுகள் “தளம்” அலுவலகத்தில் நடந்து முடிந்த நிலையில் மாசி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட “தளிர்” செயற்றிட்டம் இரண்டு மாத காலம் வரை நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் திட்டமிட்டபடி, “தளிர்” குழுவினருக்கான வகுப்புக்கள் வாரத்திற்கு நான்கு நாட்கள் வீதம் நடாத்தப்பட ஆலோசிக்கப்பட்டுள்ளது. இன்றைய புது உலகுக்கு அவசியமானது என்று உணரப்பட்ட விடயங்களான இளையோர் அறிந்திருக்க வேண்டும் எனும் நோக்கில் இச் செயற்றிட்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2) “துகிர்” இலவச அலுவலக பயிற்சி மற்றும் திறன் விருத்தி செயற்திட்டம்!

பல்கலைக்கழகம் தெரிவான, பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த மாணவர்களுக்கான அலுவலக திறனை விருத்தி செய்யும் நோக்கில் “துகிர்” எனும் செயற்றிட்டத்தை அறிமுகம் செய்ததற்கு இணங்க, 23.12.2023 தொடக்கம் 3 மாதங்களுக்கு “தளம்” அலுவகலத்தில் இவர்களுக்கான திறன்விருத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்க திட்டமிட்டு, வாராந்தம் வியாழக்கிழமைகளில் இக் குழுவினருக்கான திறன்விருத்திசார் அமர்வுகள் ஒவ்வொரு வாரமும் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.அதுமட்டுமன்றி செவ்வாய் - சனி வரையான ஏனைய நாட்களில் இவர்களுக்கான அலுவலக திறன்விருத்தி பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.

3) “அறிவாய்வியல்” நிகழ்நிலை வாராந்த கருத்தமர்வு

அரச போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து தமக்கான அரசாங்க உத்தியோகத்தை பெறுவதில் நாட்டம் கொண்டவர்களுக்கான தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் வாராந்தம் சனிக்கிழமைகளில் நிகழ்நிலை மூலமாக ”தளம்” அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது அறிவு, நாட்டு நடப்புகள், உலக நடப்புகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய கருத்தமர்வாக நடத்தப்பட தீர்மானிக்கப்பட்ட அறிவாய்வியல் அமர்வானது, மாசி மாதம் முதல் நுண்ணறிவு சார்ந்த வினாக்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

4) செயற்திட்ட முகாமைத்துவத்தின் சான்றிதழ் கற்கை

“தளம்” அலுவலகத்தால் “செயற்றிட்ட முகாமைத்துவம்” பற்றிய கற்கைநெறி நிகழ்நிலை ஊடாக முன்னெடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்வதேசதர சான்றிதழ் கற்கை நெறியை மிக குறைந்த கட்டணத்தில் திருக்கோணமலை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமான வாய்ப்புக்களை இச் செயற்றிட்டம் மூலம் அடையக்கூடியதாக உள்ளமையினால், இளையோரின் திறன்விருத்தி தொடர்பில் அக்கறை காட்டி இக்கற்கை நெறியை “தளம்” அலுவலகத்தில் மாசி மாதம் முதற்கொண்டு ஆரம்பித்து ஒழுங்கு செய்யவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

5) சமூக வலைத்தள கையாள்கை

“சமூக ஊடக விளம்பரதாரர் ஆகுவது எப்படி?” எனும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு “தளம்” அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதனபடி, இது ஒரு மாத காலம் பத்து வகுப்புக்கள் வீதம் நடைபெறும். இதில் சமூக ஊடகம் மற்றும் அல்காரிதம், சமூக ஊடகங்களில் சந்தைப்படுத்துதல், பிராண்டிங், புகைப்படம் எடுத்தல் மற்றும் கேமரா கையாளுதல், அடிப்படை எடிட்டிங் (புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள்) பயன்பாடு ஆகியவற்றில் சிறப்பு அக்கறை, உள்ளடக்கத்தை எழுதுதல், தற்போதைய அரசியல் மற்றும் சமூக அக்கறைகள் போன்றவை தெளிவுபடுத்தபட உள்ளன. 100வீத புலமைபரிசிலுடன் ரூபா 4000 கட்டணமாகப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழ், பொருத்தமான சம்பளத்துடன் (பகுதி நேர வேலை வாய்ப்புகள்) இப் பயிற்சிப்பட்டறையில் தேர்ச்சி பெற்ற சிறந்த இருவருக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6) “திண்ணை” வெளிக்கள கலந்துரையாடல்கள்!

இளையோர் எதிர்காலம் குறித்து ஆர்வம் காட்டிவருகின்ற தன்னார்வ சமூக நிறுவனமான “தளம்” அமைப்பினால் வெளிக்கள கலந்துரையாடல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டதன்படி, மாசி மாதம் தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இளையோருடன் அரசியல், சமூக, வரலாறு போன்ற விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

8) “சிங்கள மொழி வகுப்புகள்”

இலங்கையின் அரச கரும மொழியாக விளங்கும் சிங்கள மொழியறிவு, இன்றைய காலக்கட்டத்தில் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கு உதவுவதாக இருப்பதால், அதனை கருத்திற்கொண்டு தமிழ் இளைஞர்களின் மொழிவிருத்தி தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதற்கு இணங்க, “தளம்” அலுவலகத்தில் மாசி மாதம் தொடக்கம் ஐந்து மாதங்களுக்கு வாரம் ஒரு வகுப்பு என்ற அடிப்படையில் வயது மட்டுப்பாடின்றி சிங்கள மொழி வகுப்புக்களை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9) கீற்றுக்கள், துகிர், மரபு குழுவினருடனான வாராந்த கலந்துரையாடல்

“தளத்தின்” செயற்பாடுகளில் துணை நிற்கும் இளைஞர்களான “கீற்றுக்கள்”, “துகிர்” மற்றும் “மரபு” குழுவினருடன் மாதம் ஒன்றிற்கு ஒரு நாள் என்ற அடிப்படையில் கலந்துரையாடல் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. தளத்தின் செயற்பாடுகள் பயனுள்ளதாக உள்ளதா?, ஏனைய பயனுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும், குறித்த மாதத்தில் “தளம்” மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் பின்னூட்டல் பெறப்படும் கலந்துரையாடல் நிகழ்வாக நிகழ்த்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

10) தளத்தின் விருட்சம் – கிளை 2 தயாரிப்பு மற்றும் வெளியீடு

“தளம்” அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பிறரும் அறியும் வகையில் மாதாந்தம் “விருட்சம்” என்ற இதழ் வெளியிடப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதற்கு இணங்க, 2024 ஆம் ஆண்டு தொடக்கம் மாதாந்த இதழ் வெளியிடப்படும். இதில் “தளம்” அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்தும், அடுத்த மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் குறித்தும் வெளியிடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதுடன், திருக்கோணமலை சார் ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

# தளத்தின் மாசி மாதத்திற்கான திட்டமிடல்

11) திருக்கோணமலையை சார்ந்த அமைப்புகளுடன் கலந்துரையாடல்
ஒருங்கிணைந்து செயற்படல்!

“தளம்” அமைப்பானது தனிப்பட்ட ரீதியில் அதிகளவான சமூக செயற்பாடுகளை செய்து வருகிறது. மேலும் திருகோணமலையை சார்ந்த அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பல சேவைகளை செயற்படுத்துவதன் மூலமாக ஓர் சமூக ஒற்றுமையை அதிகரிப்பதுடன், அதிகளவிலான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும். அதற்கான நட்புறவு கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு இம் முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

12) பாடசாலைமட்ட கலந்துரையாடல்கள்

“தளம்” அமைப்பானது நகர்புறத்தில் உள்ள பாடசாலை மாணவர்களை மட்டும் ஆற்றல் மிக்கவர்களாக மாற்றாமல் திருக்கோணமலையினை அண்டிய கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆளுமை திறன்களை சமூகத்திற்கும் தனிமனித செயற்பாட்டுக்கும் பயனுள்ளதாக மாற்றும் நோக்கில் வரும் மாசி மாதம் தொடக்கம் மாதத்திற்கு இரண்டு தினங்கள் வீதம் நேரடி ஆளுமை விருத்தி அமர்வு ஊடாக மேம்பாடு அடையசெய்தலை நோக்காக கொண்டு இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

13) வாராந்த நிகழ்நிலை கலந்துரையாடல்

கடந்த சில காலமாக “தளத்தின்” மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி அமவுர்களில் பங்குபற்ற சிரமப்படுவோரிற்காக நிகழ்நிலை மூலம் மேற்கொள்ள முடியும் என கருதி, அத்தியாவசியமாக அறிந்திருக்க வேண்டிய அமர்வுகள் தொடர்பில் அக்கறை காட்டிவருகிறது.

அதனடிப்படையில், “தளம்” அமைப்பின் வாராந்த கலந்துரையாடல் அமர்வானது ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் இரவு 8.30 மணி தொடக்கம் 10.00 மணி வரை இடம்பெற்று வருகிறது. இளைய சமூகத்தினருக்கு பயனுள்ளதாக அமையும் இந் நிகழ்நிலை கருத்தமர்வுகளானது, தொடர்ச்சியாக மாசி மாதத்திலும் இளையோரின் உலக அறிவை பெருக்கி அவர்களுக்கு புதிய விடயங்களை கற்றுக் கொடுக்கும் பொருட்டும் அறியாத தகவல்களை அறிந்து, அவர்களின் திறனை பெருக்கிக்கொள்ளவும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

14) இளைஞர்களுக்கான புகைப்படக்கற்கைநெறி – 3 நாள் பயிற்சிப் பட்டறை!!!!

புகைப்படத்துறையில் ஆர்வம் கொண்ட இளம் சமூகத்தினரின் திறனை விருத்தி செய்து அவர்களுக்கான நிலையை இத் துறையின் மூலம் முன்னேற்றமடையச் செய்து புகைப்படத்துறையில் மிளிரச் செய்வதை நோக்காகக் கொண்டு 3 நாள் பயிற்சிப் பட்டறை ஒன்றை “தளம்” அலுவலகத்தில் 08, 09, 11 ஆகிய தினங்களில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# “இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், இளம் சமுதாயமும்”

இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் எமது அழகிய தீவான இலங்கை கடந்த சில வருடங்களாக பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு தவிப்பது கவலைக்குரிய விடயமாகும். அதிகரித்து வரும் பணவீக்கம், உயர் வேலையின்மை மற்றும் பெருகிவரும் கடன் சுமை போன்றவை இதற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது.

இந்த நெருக்கடி நீண்டகால தாக்கங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக இளைய தலைமுறையினர் இந்த சவால்களுக்கு முகங்கொடுப்பதில் முன்னணியில் உள்ளனர். எமது நாடு பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கணிசமான சவாலாக அமையக்கூடிய அதிகளவான வெளிநாட்டுக் கடன் சுமையை எதிர்கொள்கிறது. இந்தக் கடனை நிர்வகிப்பதும், குறைப்பதும் நீடித்த வளர்ச்சிக்கு அவசியமாக அமைகிறது. அதுமட்டுமன்றி இது வர்த்தக ஏற்றத்தாழ்வுகளுடன் போராடி வருகிறது.

ஏற்றுமதியை அதிகரிப்பதில் சவால்களை எதிர்கொள்ளும் போது இறக்குமதியை பெரிதும் நம்பியுள்ளது. இந்த சிக்கலைத் தீர்ப்பது மிகவும் வலுமிக்க சமநிலையான பொருளாதாரத்திற்கு முக்கியமானது. அத்துடன் அதிகளவு வேலையின்மை இளைஞர்களிடையே, சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதில் பங்களிக்கிறது. செழிப்பான பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது இன்றியமையாதது. மேலும் போக்குவரத்து மற்றும் எரிசக்தி உள்ளிட்ட போதிய உட்கட்டமைப்புகள் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றன. நிலையான வளர்ச்சிக்கு இந்தப் பகுதிகளில் முதலீடு அவசியம். எனவே இவ்வாறான செயற்பாடுகளில் இளைய சமுதாயத்தின் பங்களிப்பு அவசியமானதாகும்.

அதாவது, நாட்டின் இளம் மக்கள் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மூலம் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்க முடியும். பண்டைய கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் இளம் தொழில்முனைவோரை ஆதரித்தல் என்பன பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும்.

அதனுடன் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது சிறப்பான செயற்றிட்டம் ஆகும். நன்கு படித்த திறமையான பணியாளர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும். டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது பொருளாதார வளர்ச்சிக்கான புதிய வழிகளைத் திறக்கும். இளைஞர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்களாக இருப்பதால், டிஜிட்டல் ஆளுகை போன்ற பல்வேறு துறைகளின் டிஜிட்டல் மாற்றத்தை இயக்குவதில் முக்கிய பங்கு வகிக்க முடியும். மேலும், சமூக முன்முயற்சிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதன் மூலம் நாட்டின் சில அழுத்தமான பிரச்சினைகளான வறுமை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை போன்றவற்றுக்கு தீர்வு காண முடியும். இளைஞர்கள் புதிய கண்ணோட்டங்களையும், ஆற்றலையும் கொண்டு நேர்மறை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

முடிவில், இலங்கையின் பொருளாதார சவால்கள் மக்கள்தொகை அமைப்புடன், குறிப்பாக இளைஞர்களுடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இலக்குக் கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகள் மூலம் இளைய தலைமுறையினரின் திறனைப் பயன்படுத்துவதன்னூடாக, இலங்கையின் நெகிழ்ச்சியான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்க முடியும். பொருளாதார தடைகளை கடக்க இளைஞர்கள் தீவிரமாக பங்களிக்கக்கூடிய சூழலை உருவாக்க அரசாங்கம், வணிகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. இவற்றின் மூலம் அவர்களின் வாழ்வும் மேம்படும்.





செல்வி மு. அபிநயா

# “இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், இளம் சமுதாயமும்”

தற்போதைய பொருளாதார நெருக்கடி உலகளவில் சமூகங்கள் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இளைய தலைமுறை அதன் சவால்களின் மையத்தில் தங்களைக் கண்டறிகிறது. பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மையுடன் சிக்கிக் கொள்ளும்போது, இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் மற்றும் சமூக விதிமுறைகளை மறுவரையறை செய்யும் தனித்துவமான தடைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த சவால்களில் முதன்மையானது வேலை வாய்ப்பாகும். வேலைச் சந்தை கடுமையான போட்டிகளின் களமாக மாறியுள்ளது. இளைஞர்கள் நிலையான வேலை வாய்ப்பைப் பெறுதல் மற்றும் உயர்ந்து செல்லும் வேலைப் பாதுகாப்பின்மைக்கு வழிவகுத்தல் போன்ற இரட்டை அழுத்தங்களுடன் போராடுகின்றனர். கல்வியில் இருந்து வேலைவாய்ப்பு வரை ஒரு காலத்தில் இருந்த நேரியல் பாதை இப்போது தடைகள் நிறைந்ததாகத் தோன்றுகிறது.
பாரம்பரியமாக வாய்ப்புக்கான நுழைவாயிலாகக் கருதப்படும் கல்வி, இப்போது சவால்களை முன்வைக்கிறது. அதிகரித்து வரும் கல்விச் செலவுகள் மற்றும் நிதி உதவித் தேர்வுகள் குறைதல் போன்றவை மாணவர்களின் கடன் அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளன. இது பட்டப்படிப்பிற்குப் பிறகு நீண்ட காலம் நீடிக்கும் நிதிச் சுமையை உருவாக்குகிறது. கல்வி நிறுவனங்கள், பொருளாதாரச் சரிவால் சிரமப்பட்டு, தரங்களைப் பேணுவதற்கும், சமமான அணுகலை உறுதி செய்வதற்கும் போராடி, இளைஞர் சமுதாயத்தை மேலும் பாதிக்கிறது.

வீட்டு வசதி என்பது பல இளைஞர்களுக்கு ஒரு உறுதியற்ற கனவாகிவிட்டது. அதிகரித்து வரும் சொத்து விலைகள் மற்றும் வாடகை விகிதங்கள் வீட்டு உரிமையின் வாய்ப்புகளை சவாலுக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரத்தில் சமரசங்களை கட்டாயப்படுத்துகிறது. ஒரு காலத்தில் தனிப்பட்ட பாதுகாப்பின் அடிப்படையாக இருந்த நிலையான வீடு என்ற கருத்து இப்போது பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளால் மறுவடிவமைக்கப்படுவது இளைஞர்களினுடைய எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை குறைக்கிறது. இளைஞர்களின் உளவியல் பாதிப்பு வெளிப்படையாகவே உள்ளது.

கணிக்க முடியாத பொருளாதாரச் சூழலில் வெற்றி பெறுவதற்கான இடைவிடாத அழுத்தம், எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மைகள், அதிகரித்த மன அழுத்தம் மற்றும் பதற்ற நிலைகளுக்கு வழிவகுக்கிறது. மன ஆரோக்கியம் ஒரு முக்கியமான கவலையாக உருவெடுத்துள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்வதில், ஒரு முழுமையான அணுகுமுறை அவசியம். கொள்கை வகுப்பாளர்கள் வேலை உருவாக்கத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கல்வி அணுகலை அதிகரிக்க வேண்டும். மேலும், மன ஆரோக்கியத்தை அங்கீகரிப்பதும், ஆதரிப்பதும் சமூகக் கருத்தாக்கங்களில் முன்னணியில் இருக்க வேண்டும்.

இளைஞர்கள் இந்தப் புயலை நோக்கிச் செல்லும்போது, பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பது மட்டுமல்லாமல், வலுவான எதிர்காலத்தைக் கட்டமைக்கத் தேவையான திறன்கள், ஆதரவுடன் கூடிய நெகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துவதை உறுதிசெய்ய கூட்டு முயற்சிகள் இன்றியமையாதவை. நிச்சயமற்ற தன்மையில், இளம் தலைமுறையினரின் பின்னடைவு, தகவலமைப்பு, உள்ளடக்கியவை நிலைத்திருக்கக்கூடிய நெருக்கடியுடனான பிந்தைய சமூகத்தை வடிவமைப்பதற்கான அடித்தளமாகிறது.





செல்வி ர. கிஷோமி

# புலம் பெயர்தலும் திருகோணமலை இளம் சமுதாயமும்

உலகின் பாரிய புரட்சிகளும் மாற்றங்களும் எழுத்துக்களால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை பெரிதும் நம்புபவர்களில் நானும் ஒருவன். எனது எழுத்துக்களால் எல்லாவற்றையும் மாற்றிவிட முடியாதென்றாலும் தினையேனும் மாற்றி விட முடிந்தால் அதுவே எனக்கு திருநாளாகும் என்ற ஏக்கத்துடன் இந்தத் தலைப்பை தொடுகின்றேன்.

இக்கட்டுரை முடிவில் என் நட்பு வட்டம் குறுகவும் வன்மங்கள் வளரவும் வாய்ப்புகள் அதிகமிருந்தாலும் நெடுநாளாக நெஞ்சில் நெருடலாக இருக்கின்ற இவ்விடயம் பற்றி பேசியாக வேண்டும் என்ற வைராக்கியத்துடன் கட்டுரைக்குள் விரைகிறேன். தொப்பி அளவாகவே இருந்தாலும் தயவுசெய்து தூக்கி மாட்டிக் கொள்ளாதீர்கள், இது மண்ணை நேசிக்கும் மைந்தனின் மனம் திறந்த புலம்பல்.

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து." வள்ளலார் அன்றுரைத்தபடியே, இன்று அதிதீவிரமாக அங்குமிங்கும் பரவி முளைத்து அடுத்தநாளே விருட்சமாகி வீழ்ந்து போகின்ற வித்தாகிய பேரவா தான் இந்த வெளிநாட்டு மோகம். எமது திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த வரைக்கும் இன,மத,வயது வேறுபாடின்றி அனைவரையும் அடிமையாக்கி இருக்கின்ற பெரும் போதையாக வெளிநாட்டு மீதான வீண் மோகத்தை குறிப்பிடலாம்.

ஒட்டுமொத்தமாக அனைவரையும் ஒரே தராசில் வைத்து அதே அளவுகோலால் கணிப்பிடுமளவுக்கு கல்நெஞ்சக்காரனல்ல. அது அடிப்படையில் ஆபத்தானது என்பதை ஆழப் புரிந்தவன் ஆகையால் வெளிநாடு செல்வதை மரண தண்டனை குற்றமாக்கி புலம்பெயர்பவர்களை தூக்கு மேடையேற்ற நான் தயாரில்லை. நியாயமான காரணங்களுக்காக வெளிநாடுகள் நோக்கி புலம்பெயர்பவர்களை குற்றவாளிகள் ஆக்கவும் விரும்பவில்லை. ஆனால் இங்கே நியாயமான காரணங்கள் என்பதை எவையென வரைவிலக்கணப்படுத்த முடியாமல் இருப்பதையும் என்னால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அத்திறம் நிற்க என்பது போல் அவரவர் தமக்கென தனி வரைவிலக்கணங்களை வடிவமைத்துக் கொள்வது வழமை தான்.

ஆனால் இங்கே நான் முரண்படுகின்ற விடயங்களை தெளிவாக முன்வைத்து செல்லலாம் என நினைக்கின்றேன். அடிப்படைத் தேவைகளாக அடையாளப்படுத்தப்படுகின்ற உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம் போன்றவற்றை கூட அடைந்து கொள்வதிலே ஒருவன் இடர்களை சந்திக்கிறான் என்றால் அவனின் இறுதி முடிவாக வெளிநாடு இருப்பதில் தவறில்லை என்பது எனது வாதம். மூன்று வேளை உணவு என்பதே பெருங்கனவாகக் கொண்டவனுடன் எனக்கு எந்தவிதமான பகையுமில்லை.

ஈரேழாண்டு பள்ளிக்கல்வி, பற்றாக்குறைக்கு பல்கலைக் கல்வி, பாக்கெட்டிலே பர்சரி பணம் என தாய்நாட்டின் தமது மக்களின் வரிப்பணத்தில் அனைத்து சலுகைகளையும் அனுபவித்து விட்டு படிப்பு முடித்து பட்டமளிப்பு முடியும் முன்னர் வகை வகையாய் தரகர் பிடித்து, விநோதமாய் விசா அடித்து கோடிகளை கொட்டி கொடுத்து தாய் நாட்டை தாரைவார்க்கும் அதிதீவிர சுயநலவாதிகளை அடியோடு வெறுக்கிறேன்.

”மாடு மேய்த்தாலும் அரசாங்க அலுவலகத்தில் தான் மேய்ப்பேன்” என்று அரசியல்வாதிக்கும் அடியாட்களுக்கும், அம்மாவின் சங்கிலியை அடகு வைத்து ஐந்து பத்தை லஞ்சமாக கொடுத்து அடிபிடிபட்டு எடுத்த வேலையை தொலைத்து விட்டு புதுநாடு சென்று பழைய பாத்திரம் கழுவ துடிக்கும் களிமண்காரர்களை கடித்துக் குதற முயல்கிறேன்.

தனிப்படை கட்டி தாயகக் கனவினை தம்நெஞ்சில் சுமந்து தன்னலம் பாராது மாய்ந்த மறவர்களின் இன்னுயிர் தியாகம் பற்றி எள்ளளவும் எண்ணாமல், மோகம் எனும் பிணியில் சிக்கி தமது வாழ்வோடு சேர்த்து இனத்தின் உயரிய இலக்கினை வேரோடு சாய்க்கும் வெற்று மோகத்தினை தமிழினத்திற்கான பெரும் துரோகத்தின் வரிசையில் இரண்டாமிடத்தில் சேர்க்கிறேன்.

நீங்கள் கற்ற கேள்வி என் பெற்ற அறிவும் உங்களுடைய சுயலாபத்திற்காக மாத்திரம் பயன்படுமாயின் அக்கல்வியால் பயனேதுமில்லை. கல்வியானது வெறுமனே வருமானம் ஈட்டுவதற்கான வழிவகையல்ல. மாறாக அது ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கான திறவுகோல். அதுவும் மிக இழிநிலையில் இருக்கின்ற எமது தமிழ் சமூகத்தின் கடைசி ஆயுதம் அந்தக் கல்வி ஒன்றே.

இன்றைய இளம் சமூகத்திடம் இறுதியாக இரந்து நிற்பது ஒன்றைத்தான். கல்வி எனும் ஆயுதம் ஏந்தி கனவுகள் நோக்கி புறப்பட தயாராகுங்கள். உங்களுடைய இலக்கு கரிகாலனுடைய கனவு தேசமே தவிர்த்து கனடா தேசமல்ல என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஈட்டிய கல்வியை துளியேனும் சமூக நலனுக்காய் பயன்படுத்துவீர்களாயின் நிச்சயமாக எனது இனம் மீளும். பேரவா தான் இருந்தாலும் அப்பெரும் பொறுப்பினை உங்களிடத்தில் பகிர்ந்தவனாக விடைபெறுகிறேன்.



கேஷிஹறன் இளமுருகநாதன்

## இயற்கை அன்னையே

பூங்காற்றாய் தோன்றி ஒரு தேடல் உருவானதே உன்னிடம்
கவி பாடும் கவிஞனோ உன்னை புகழ்பாடுவான்
தனிமையிலே உன்னிடம் தாய் அன்பை தேடுவான்
ஆறறிவு உடைய நாமோ இன்று உன்னை சிதைக்கின்றோம்
குழந்தைகள் செய்யும் தவறினால் தாயாய் நீ
கண்ணீர் வடிக்கிறாய்
துயரங்களை தாங்கி ஒரு நாள் நீ இறந்திடும் வேளையில்
தீயினை நீயும் கக்கியே நீ உலகினை அழித்திடு.



பிரியன்
தம்பலகாமம்

# தளம் எனும் சேவகன்!!

“அன்பிலார் எல்லாம்  தமக்குரியர் – அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு“ என்று வள்ளுவன் வாழ்த்திட
எழுந்து வந்தான் இலங்கையின் கிழக்கு மண்ணில் ஒருவன்...

ஐந்து வருடங்கள் மக்கள் சேவையே மகேசன் சேவை என விவேகானந்தர் பொன் மொழியை மனதில் நிறுத்தி
ஆறாம் வருடம் காலடி எடுத்து வைத்தான் அவன்!!

காசிற்காக கல்வி விற்கும் வியாபார நரி கூட்டம் நடுவே!!.. உனக்கு நான் இருக்கிறேன் என உரக்க கூறினான்!!

விரல் விட்டு எண்ண இயலாத பல்கலைக்கழக பட்டாம்பூச்சிகள் அவன் பறக்கச் செய்தது எனலாம்!!

புத்தக பூச்சிகளாய் அலைந்து திரியும் சிலரை அழைத்து வந்து திறமையாய் மாற்றினான் – அவன்!!

வெறும் வரிகள் அவன் பெருமை கூறிட முடியாது
அதனிலும் பெரிது – அவன் சேவை!!

“கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி மாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு“ எனக் கூறி
தன் சேவையை செய்பவன் – இவன்!!



செல்வி மு. அபிநயா

“பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவற் புகழ்வர் – செந்நாப்புலவர் பாரி ஒருவனும் அல்லன் மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே!!“ என கபிலர் போல
வஞ்சமுள்ள நெஞ்சுகளை நினைக்கச் செய்தான்..

இத்தனை புகழ் இருந்தும் தலைக்கணமற்ற தைரியமாய் வலம்வரும் அவனே – எங்கள் தளம் எனும் சேவகன்!!

## மனித வாழ்க்கை!!

சாதியால் பிளவுபட்டு பணத்தால் சிக்குண்டு –
புது நோய்களால் வீட்டிற்குள் அடைப்பட்டு
துன்பத்தில் துவண்டு கவலையில் ஆட்கொண்டு
பொறாமையால் வீழ்ந்து பேராசையால் அழிந்து
கூட்டு குடும்பம் துறந்து
தனி குடும்பத்தில் சீரழிந்து
மனிதம் மறந்து வாழும் – மனிதனே!!!

பாயினங்களை பாரீர்
ஒற்றுமையாக!! கூட்டமாக!!
சுதந்திரமாக!! பறப்பதை பாரீர்!!

மனிதனின் மகத்துவம்
மற்றைய உயிரினங்களுக்கு – படைத்தவன்
தராதது ஏன்?
அதற்குப் பதிலாய் கூறினான்
"மனிதனுக்குள் மனித நேயம் அதை
மலரச்செய்யும் வாழ்க்கை இது!!"

மூன்று வேளை உணவிற்கு இரவு, பகலாய்
வேலை செய்யும் கூட்டம் இது!!
அதற்குள்ளும் பல்வேறு
யுத்தங்களும் வந்து போகும்!!

குழந்தை ஒன்று பிறந்து
முதலில் பெற்றோர் கேட்கும்..!
பின் கல்வி கேட்கும்..!
இறுதி காசைக்கேட்டு அதன்
பின்னே ஓடும் என வாழ்க்கையின் நியதி
தலைகீழானதே!!



செல்வி மு. அபிநயா

தொழில்நுட்பம் செய்த நன்மையும், தீமையும்
பல உண்டு – மனித வாழ்வில்!!
வேலையை இலகுவாக்கி எம்மை
சோம்பேறியாக்கிய கெட்டித்தனம்
இதுக்கே உண்டு!!

பிறப்பு முதல் இறப்பு வரை போராட்டம் – இளவயதில்
மன அழுத்த வலையில் சிக்கித் தவிப்பு!!
மோசடிகள், துரோகங்கள்,
கோபங்கள், இழப்புக்கள்,
தோல்விகள் என எதிர்மறை பரிசுகளோடு
சிறிது சந்தோஷம் என்ற நேர்மறை பரிசும் தருவது
இந்த வாழ்வு!!

என்னதான் பணத்தில் படுத்துறங்கிய போதும் – மனதில் ஏற்படும் நிம்மதி எனும் செல்வமும்.. கனாக்கள் தரும் அறுசுவைக்கு அப்பாற்பட்ட சுவையும் – கணப்பொழுதும் கிடைக்காதே!!

உழைத்தும், பிடித்தும் உணவற்ற ஏழைக்கு சோறிட்டால் உன்னதமாகும் வாழ்வுமே!!
கவலையில்லாமல் நாட்களும்
பேராசை இல்லா செல்வத்தோடு
செழித்திட வாழ்த்துகிறோம்
மனித வாழ்வே!!!

## சிந்தனை

“அரசாட்சி தொடங்கி ஆங்கிலேயர் வரை
அடிமைப்பட்டு இருந்த நாம்
எப்போது சிந்திக்கப் போகிறோம்?
சுயமாக,
சிந்தனை மூலமே
பிற ஜீவிகளிடமிருந்து வேறுபடும் நாம்
தற்போது,
அனைத்தையும் இழந்து நிற்கிறோம்
அனாதைகளாக,
செம்மறிகள் போல் தொடர்கிறோம் – நம்
போதுமென்ற வாழ்க்கையை
ஆசைகளை பூர்த்தி செய்கின்றோம்
அடிப்படை உணராமல்,
ஐம்புலன்களையும் இயக்குகிறோம்
அடுத்தவர் கூற்றுக்களை
ஆமோதிக்க மட்டுமே,
சுய சிந்தனை இழக்கிறோம்
செயற்கையில் வாழ்கிறோம்
நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த போதும்,
நம் சிந்தனையோ காலணித்துவத்தில்
கானலாய் மாறுகிறது,
காலடியில் புதைகிறது
காலத்தை கையிலெடுப்போம்
கருத்துக்களால் ஜனிக்கும்
ஊறில்லா சிந்தனையை
உரக்கக் கூறுவோம்,
உயிர் தொடும் வரை....

வேல் திரவியம்

## அம்மா!!!

உயிரின் உயிராய்
உறவின் உறவாய்
அழகியா? அழகனா? என்று
பாரது பெற்றெடுக்கும்
என்னவளே!!!

ஆவலோடு உன்னை என்
தயவில் ஆதரிக்க
ஏங்குகிறேன்...
இலட்சம் உறவு இருப்பின்
உன் உறவை விடமாட்டேனே
உயிரே!!
என் ஒவ்வொரு துளி கண்ணீரும்
உன் சோதியை பாழாக்கிறதே !
குருதியை பாலாக்கி எனக்கு
உணவாக கொடுத்து
உயிர் தந்தாயே
என்னவளே!!

கர்ப்பிணியாய் சுமந்து – என்னை
காதலூட்டி வளர்க்கையின்
காலமெல்லாம் சிரித்திட காப்பேன் – உன்னை!
என் புருவம் காக்கும் விழிகளால்!

பாரதிதாசன் கவிஷா



## என் நண்பனுக்கென!

என் நண்பன் என்று எண்ணி ரசித்த கண்களை
இன்று நீ அழ வைத்தது ஏனோ?
பிணமேடையில் நீ உறங்கும் தருணத்தை
பார்த்து உருகினேன்,

வார்த்தை ஏதும் இன்றி கண்ணீருடன் என்
கண்கள்....
காணும் யாவும் கனவோ, கற்பனையோ என்று
ஒரு கணம் தவிக்கிறேன்

ஆண், பெண் நட்பின் உன்னதம் உணர்ந்தேன்
உன்னிடம்
உன் இருண்ட இரவில் நான் ஓர்
வெளிச்சம் என்றாய்
இன்று அழையா விருந்தாளியாய்
அழுது கொண்டே நிற்கிறேன் உன்
இறுதிச் சடங்கில்,

இதயம் உடைந்தது,
மாரடைப்பில் மரணிக்கும் வயதா உனது
என எண்ணிப்பார்க்கும் வேளையில்!
ஒன்றும் புரியாமல் நிற்கின்றேன்
இந்த காட்சியை நான் காணவா
இனிக்க இனிக்க வந்து நட்பு கொண்டாய்.

செல்வி மு. விஷ்ணுவர்தனி

## மகளதிகாரம்

அ முதல் ஃ வரை பன்னிரெண்டு உயிரெழுத்து தான்
இருந்தும் "அப்பா" என்ற மூன்றெழுத்திலேயே
அவள் உலகம் அடங்கியது
ஆண்களை கண்டு அச்சம் அடையும் இவ்வுலகிலே
ஒரு ஆண் தேவதையாய் அவளுக்கு கிடைத்த வரம்
அவளது அப்பா ஆசையாய் அன்னமூட்ட
அருகில் அவள் அன்னை இருந்தும்
அவள் மனம் ஒவ்வொரு நொடியும் தந்தையின்
அன்பிற்கே ஏங்கியது
இளைய மகளும் அவள் தான் – அப்பனின்
இதய துடிப்பும் அவள் தான்
தான் என்று அகந்தை கொண்டு பேசி திரிபவள்
தந்தையிடம் அடங்கி போகும் அழகோ தனி
மகளோ ஒரு வகை கோபக்காரி தான்
ஆனால் அப்பனோ அமைதியின் பெருங்கடல்
எத்தனையோ காவியத்தில் தந்தை தாயாக மாறினார்களாம்
இவளது காவியத்தில் ஒரு தொலைதூர நண்பன் ஆனான்
மனம் கவர ஆயிரம் பேர் வந்தாலும் என்
அப்பாவிற்கு நான்
மழலை என்று ஒதுக்கி வைத்தாள்
அப்பனின் அன்பிற்கு அடிமையாக இருந்தவள்
அம்மாவிற்கு ராணியாக இருந்தாளாம்.

செல்வி மு. விஷ்ணுவர்தனி



# திருக்கோணமலை இளையோரின் பார்வையில் அரசியல்

எனக்கு வாசித்ததில் பிடித்தது.
"ஓர் உண்மையான தலைவரின் மறுபக்கம் எப்படி இருக்க வேண்டும்?"
பதில்: உண்மையான தலைவருக்கு மறுபக்கம் என்பதே இருக்காது...
இதுவே நிதர்சனம் ஆகும்.

– ஊடகன் –
உவர்மலை

யாரோ ஒருவன் கேட்டானாம்" தலைவர் ஏன் கவலையா இருக்கேர்" என்று, அதற்கு இன்னொருவன் கூறினானாம் "அவருக்கு சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது" என்று, அவர்களின் நடிப்பு அவ்வளவு அருமையாக இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை!

– சேவகி –
நிலாவெளி

பொங்கலோ பொங்கல்! பொங்கலை அரிசி வைத்து பொங்கிய ஒருகாலம் போனது, இன்று பொங்கலை அரசியல் வைத்து பொங்கிய காலமானதே!

– அறிவுமதி –
திருக்கோணமலை

அடேய்! நாட்டு மக்களுக்காக நாட்டை அபிவிருத்தி செய்யலாம்.ஆனால், நாட்டு மக்களிடம் சுரண்டிய பணத்திலேயே அபிவிருத்தி செய்வது ஒரு வகை கெட்டிதனம் தான்.

– உண்மை விளம்பி –
தம்பலகாமம்

"

தெருக்களில் நாய், பூனை, மாடுகள் படுத்து உறங்கிய காலம் போய் மனிதம் உறங்கும் காலம் ஆகியது இன்றைய காலம்,
வயிற்று பசியை போக்க மட்டையை தூக்கி தெருக்களில் போறாடிக் கொண்டு இருக்கிறது இன்றைய சமூகம்.
தன் உயிரை காப்பாற்ற தன் உயிர் தாயை நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடு செல்கிறது பிள்ளைகள்.
அரசியலில் உள் நுழையும் போது வெறும் பை அரசியலை விட்டு செல்லும் போது வாழையடிவாழை கோடிஸ்வரன் இது தான் இலங்கையின் அரசியல் !!!

– அ. தர்ஷிகா –
சல்லி

"

"

மக்களின் பிரச்சனைகளை மேலோட்டமாக ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை வழங்கி தற்பெருமை கருத்துக்களை பேசும் அரசியல்? ஏன்?
மக்களின் ஆழமான தீர்வுகளை வழங்க மறுப்பது ஏன்? பெரும்பான்மை அரசியல் அதிகாரங்களுக்கு கட்டுப்படுகிறதா?

– கிருஷ்ணமூர்த்தி டிலக்சன் –
கப்பல்துறை, மனையாவளி.

"

"

இலங்கை அரசியல் மக்களுக்காக குரல் கொடுக்காது தங்களுக்காக குரல் கொடுக்கிறது. தங்களுடைய கடனை அடைக்க மக்களிடமிருந்து மெல்ல சுரண்டிய அரசு இன்று பெறுமதி சேர் வரி வரி என்ற பெயரில் மொத்தமாக அள்ளி எடுக்கிறது. அதுமட்டுமின்றி இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இளையோருக்கான வேலைவாய்ப்பு குறைவடைகிறது எனலாம்.

– மு. அபிநயா –
உவர்மலை, திருக்கோணமலை

"

# திருக்கோணமலை இளையோரின் பார்வையில் அரசியல்

இலங்கையில் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமானது இன ஒதுக்கம் சார்ந்த பிரச்சினைகள் ஆகும்.அரசியலமைப்பை பன்மை சமூகத்திற்குரியதாக மாற்றி இலங்கையின் பன்மைத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். தனியே ஒரு இனத்திற்கும் மதத்திற்கும் முன்னுரிமையளிக்கக் கூடாது.

– ம. துவாரகா –
கோபாலபுரம்

திருகோணமலை மக்களின் பார்வையில் அரசியல், சர்வதேச சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலார் வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான இயக்கம் மட்டுமே. விண்ணை முட்டும் விலைவாசி, உணவு, எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற மக்களின் ஆழமான கருத்துக்களின் தீர்வுகளை வழங்க அரசியல் மறுப்பது ஏன்? இது தான் இன்றைய அரசியல்.

– சௌ. ரதணியா –
நிலாவெளி

யார் அரசியலுக்கு வந்தாலும் திருகோணமலை நிலைமை மாறாது என்று இளைஞர்கள் திருமலை அரசியலில் ஈடுபட ஆரம்பிக்கிறார்களோ அப்போது தான் இந்நிலை மாறும். ஆனால் நம் இளைஞர் சமுதாயம் சமூக ஊடகங்களில் மாத்திரம் போராளிகளாக இருக்கின்றனர்.
வாய் பேச்சு செயலாக மாறும் வரை நம் நிலைமை இதே தான்

– மெய்யளன் –
தம்பலகாமம்

# இதழாசிரியர் குழாம் விபரம்



செல்வி ஜிதுஷா அன்டன் ஜூட்
தலைமை ஆசிரியர்



செல்வி மு. அபிநயா
உப ஆசிரியர்



செல்வி ம. டிலானி
உப ஆசிரியர்



செல்வி ஞா. நிதர்சனா
உப ஆசிரியர்



கேஷிஹன் இளமுருகநாதன்
வடிவமைப்பாளர்

தளம்
THALAM

**எமது மண்ணுக்காய் தளத்தின் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்**